செ.வெ.எண்:06 நாள்:04.01.2018

# அரியலூர் மாவட்டத்தில் 26.01.2018 அன்று நடைபெறவுள்ள குடியரசு தின விழாவிற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சே.தனசேகரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், 26.01.2018 அன்று அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ள **"குடியரசு தின"** விழாவிற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆலோசனைக்கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் **திரு.சே.தனசேகரன்** அவர்கள் தலைமையில் இன்று (04.01.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வருவாய்த்துறை, காவல்துறை, வளர்ச்சித்துறை, பள்ளிக்கல்வித்துறை, மாவட்ட வழங்கல் துறை, கூட்டுறவுத்துறை, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், புதுவாழ்வுத்திட்டம், வட்டார போக்குவரத்து அலுவலர், செயற்பொறியாளர் (கட்டிடம்) மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, மாவட்ட சமூக நலத்துறை, வேளாண்மைத்துறை, வேளாண்மை பொறியியல்துறை, சுகாதாரப்பணிகள், நெடுஞ்சாலைத்துறை, நகராட்சி ஆணையர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொது விநியோகத்திட்டம், அனைத்து வட்டாட்சியர்கள், கால்நடைப் பராமரிப்புத்துறை, மாவட்ட பதிவாளர் மற்றும் சம்மந்தப்பட்ட அலுவலர்கள், விழா சிறப்பாக நடைபெறுவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட வருவாய் அலுவலர் **திரு.சே.தனசேகரன்** அவர்கள் கலந்தாய்வு மேற்கொண்டார்கள்.

இக்கூட்டத்தில், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை ஜி.கே.லோகேஷ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஜே.சுரேஷ்குமார், கோட்டாட்சியர்கள் மு.மோகனராஜன் (அரியலூர்), ப.டினாகுமாரி (உடையார்பாளையம்), மாவட்ட வழங்கல் அலுவலர் இ.கதிரேசன், கால்நடைப்பராமரிப்பு இணை இயக்குநர் எம்.நசீா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிசாமி, வட்டாட்சியர் சு.முத்துலெட்சுமி (அரியலூர்) அனைத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.